தினகரன் தூத்துக்குடி

# நேஷனல் பொறியியல் கல்லூரியில் சிறப்பு கருத்தரங்கு

கோவில்பட்டி, மார்ச் 9: கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் இயந்திர பொறியியல் துறை சார்பில் பயணிகள் மற்றும் போர் விமானங்களின் வடிவமைப்பு, அதன் முக்கியத்துவம் என்ற தலைப்பில் ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் காளிதாஸ முருகவேல் தலைமை வகித்தார். மாணவர் மேகசுந்தர் வரவேற்றார்.

பெங்களூரு ஆக்ஸிஸ் கேடஸ் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு பேசுகையில், "கற்றல் என்பது ஒரு வாழ்நாள் பயணம், மாணவர்கள் இன்றைய தொழில்நுட்பத்தை திறந்த மனதுடன் தினமும் ஆர்வமுடன் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

பெங்களூரு ஆக்ஸிஸ் கேடஸ் நிறுவன மூத்த துணை தலைவர் பாசவன்னா, ஏரோஸ்ட்ரக்சர் பற்றி வளரும் பொறியாளர்களுக்கு விளக்கினார். துணை தலைவர் மற்றும் பொறியியல் பிரிவு தலைவர் ஹரி பாபு, ஏர்பஸ் வடிவமைப்பு மற்றும் அதன் வளர்ச்சி என்ற தலைப்பில் மாணவர்களுக்கு எளிய முறையிலும் அதிலுள்ள பல்வேறு சிரமங்கள் பற்றியும் எடுத்து கூறினார்.

பெங்களூரு மிஸ்ட்ரால் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி முஜாஹித் ஆலம், பெங்களூரு ஆக்ஸிஸ் கேடஸ் நிறுவன தலைமை தொழில்நுட்ப அதிகாரி ராஜிவ் ராமசந்திரன் ஆகியோரும் பங்கேற்று பேசினர்.

கருத்தரங்கில் 2ம் மற்றும் 3ம் ஆண்டு இயந்திரவியல், மின் மற்றும் மின்னணுவியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறை மாணவர்கள், பேராசிரியர்கள் என 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாணவி சுப்பிரியா நன்றி கூறினார். ஏற்பாடுகளை கல்லூரி இயக்குநர் மற்றும் முதல்வர் ஆகியோர் வழிகாட்டுதலின்படி வேலைவாய்ப்பு பிரிவு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.



▸ கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் இயந்திர பொறியியல் துறை சார்பில் சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது.